**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 237/2013 c/w அ.வ.எண்.62/2014</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜுன் மாதம் 08** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **08.06.2026** |
| **பெயர்** | **பாஸ்கர்** |
| **த/பெ** | **வீரராகவன்** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம் – 12.37. பி.எம்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

4. இதே நீதிமன்றத்தில் பக்கநாயுடு எழுதி உயிலைஅனசரித்து வெங்கடேசனுக்கும், முனிநாதன் வகையாறா மீது நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் இதே நீதிமன்றத்தில் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். முதலில் அவர்கள் தான் தாக்கல் செய்தார்கள் அதன் பிறகு தான் நான் தாக்கல் செய்தேன். இந்த அசல் வழக்கு எண் 237/2013 வாதி என் மீது முனியம்மாள், விஜயக்குமார் மற்றும் ஜோதி ஆகியோர் மீது தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு தான் நான் முனிக்குமார் மீதும் என் மாமியார் முருகம்மாள் மீதும் அசல் வழக்கு எண் 62/2014 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

5. இவ்வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் 2 அயிட்டம் . முதல் அயிட்டம் சர்வே எண் 101/1–ல் 1 ஏக்கர் 10 செண்ட். இரண்டாம் அயிட்டம் சொத்தில் சர்வே எண் 87/5–ல் 77 செண்ட் உள்ளது. முதல் அயிட்டம் சொத்தானது பக்காநாயுடு எழுதிய உயிலில்

இடம் பெறவில்லை என்றால் சரிதான். அப்படி இருக்கையில் இரண்டாம் அயிட்டம் சொத்து உயிலில் உள்ளதா என்றால் உள்ளது. வாதி முனிக்குமார் இவ்வழக்கு சொத்து பக்காநாயுடுவின் பூர்வீக சொத்தாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல பக்காநாயுடு கிரையம் பெற்ற சொத்தாகும். பக்காநாயுடுவின் மகன் தான் பாண்டுரங்கநாயுடு என்றால் சரிதான். பாண்டுரங்கநாயுடுவின் மனைவியான முருகா என்கிற முனியம்மாள் தான் என் மாமியார் என்றால் சரிதான்.

6. பாண்டுரங்கநாயுடுவிற்கு சீனிவாசன் மற்றும் விஜயக்குமார் என இரண்டு குமாரர்களும் ஜோதி என்கிற ஒரு குமாரத்தியும் உள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் தேதியில் விஜயக்குமாருக்கு 9 வயது என்றும் சீனிவாசனுக்கு 5 வயது என்றும் ஜோதிக்கு 1 வயது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். உயிலில் எ அட்டவணை சொத்து மற்றும் பி அட்டவணை சொத்து என்று தனித்தனியாக உள்ளது என்றால் சரிதான். எ அட்டவணை சொத்து யாருக்கு சேரவேண்டியது என்றால் விஜயக்குமார் மற்றும் சீனிவாசன். பி அட்டவணை சொத்து யாருக்கு சேரவேண்டியது என்றால் ஜோதிக்கு சேரவேண்டியது. மேற்சொன்ன மூவருள் சீனிவசான் மட்டும் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மைனராக இருக்கும் போதே இறந்துவிட்டார். மேற்சொன்ன ஜோதி தான் என் மனைவி என்றால் சரிதான்.

7. அந்த உயிலில் குறிப்பிட்டுள்ள வயதின் அடிப்படையில் 1998 லேயே ஜோதி மேஜராகிவிட்டார் என்றால் சரிதான். சீனிவாசன் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டதால் அவரின் தாயாரான முருகா என்கிற முனியம்மாள் தான் வாரிசு என்றால் சரியல்ல. அவரின் சகோதர மற்றும் சகோதரிகள் வாரிசுகள். நான் செல்லாது என்று கூறிய ஆவணங்கள் தாவா சொத்து ஒன்றாக உள்ளதா அல்லது தனித்தனியாக உள்ளதா என்றால்

தனித்தனியாக உள்ளது. ஒன்றாம் அயிட்டம் சொத்து குறித்து 21.08.1989 தேதியில் என் மாமியார் முருகம்மாள் தனக்காகவும் அவருடைய மைனர் மக்களுக்காகவும் கிரையம் பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். அது செல்லாது. இரண்டாம் அயிட்டம் சொத்து குறித்து 26.07.1990 தேதியில் என் மாமியார் முருகம்மாள் தனக்காகவும் அவருடைய மைனர் மக்களுக்காகவும் கிரையம் பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். அது செல்லாது.

8. மேற்சொன்ன சொத்துக்கள் வாங்கிய காலத்தில் இருந்து முனிக்குமார் அனுபவத்தில் தான் இருந்தது என்றால் தெரியாது. தாவா ஒன்றாம் அயிட்டம் சொத்து குறித்து முனிக்குமார் பெயரில் பட்டா எண் 506 மாறியது என்றால் முதலில் அது ஜோதி பெயரில் மாறியது தற்போது தான் முனிக்குமார் பெயரில் மாற்றப்பட்டது. தாவா இரண்டாம் அயிட்டம் சொத்து குறித்து முனிக்குமார் பெயரில் பட்டா எண் 404 மாறியது என்றால் முதலில் அது ஜோதி பெயரில் மாறியது தற்போது தான் முனிக்குமார் பெயரில் மாற்றப்பட்டது. மேற்சொன்ன விவரத்தை என்னுடைய பதிலுரையிலோ அல்லது பிரமாணவாக்குமூலத்திலோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துகள் என்பதால் பக்காநாயுடு தனிப்பட்ட முறையில் உயில் சாசனம் எழுத உரிமை இல்லை என்றால் சரியல்ல. அவர் கிரையம் பெற்ற சொத்துக்கள். நான் தாக்கல் செய்த வழக்கில் வழக்கு சொத்து பக்காநாயுடுவிற்கு சொந்தமனாது என்பதை காண்பிக்க ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

9. 21.08.1989 மற்றும் 26.07.1990-ல் முதல் மற்றும் இரண்டாம் அயிட்டம் சொத்துக்கள் முறையே விற்ற போது அதில் பாண்டுரங்கநாயுடுவும் சேர்ந்து தான் கையொப்பமிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த

ஆவணங்கள் உண்மையான ஆவணங்கள் என்றும் அது என்னையும் என் மனைவியையும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் மனைவிக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அவை. ஒன்றாம் அயிட்டம் சொத்து உயிலில் குறிப்பிடாமல் இருக்கும்பட்சத்தில் அது எப்படி என் மனைவிக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்றால் பட்டாவின் அடிப்படையில் பாத்தியப்பட்டது. ஒன்றாம் அயிட்டம் சொத்தில் பக்காநாயுடுவின் பேரன்களை குறிப்பிடாமல் இருந்த நிலையில் அவர்களுக்கு அதி6ல் உரிமை உண்டா, இல்லையா என்றால் இல்லை.

10. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்த பதிலுரையிலோ, அல்லது நான் தாக்கல் செய்த வழக்குரையிலோ தாவா ஒன்றாம் அயிட்ட சொத்து என் மனைவிக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது என்றும் அவர் உடன்பிறந்த சகோதரருக்கு பாத்தியப்பட்டது அல்ல என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன இரண்டு பத்திரங்களை படித்துப்பார்த்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதன் விற்பனையாளர்கள் எதற்காக விற்கப்பட்டதாக தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். ஆழ்துளை கிணறு எடுப்பதற்காக பொருள் வேண்டி விற்பனை செய்தார்கள் என்று கூறியுள்ளது ஆனால் அது பொய்யான காரணம். (சாட்சி தாமாக முன்வந்து அனைத்து சொத்துக்களும் கிரைய ஆவணங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது ஆழ்துளை கிணறு போடுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை, ஏற்கனவே போர் குறித்து உயிலிலே குறிப்பிடப்பட்டுள்ளது.)

11. ஒன்றாம் அயிட்டம் சொத்தை விற்றபோது மீதமுள்ள சொத்துக்கள் இருந்தது என்றும் அவற்றில் ஆழ்துளை கிணறு அமைக்க தான் கிரையம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஒன்றாம் அயிட்டம் விற்ற பின்பு 26.07.1990 தான் ராணியம்மாளுக்கு ஒரு சொத்து விற்கப்பட்டது என்ற

விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் 1997–ல் தான் ஒரு சொத்து கேசவநாயுடுவிற்கு விற்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நன்றாக தெரியும் என்றும் அதனால் தான் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 236/2013 வழக்கினை முனிநாதன் வகையறா எங்கள் மீது தாக்கல் செய்தும் நானும் அதே சொத்துக்கள் குறித்து முனிநாதன் வகையறா மீது இதே நீதிமன்றதில் அசல் வழக்கு எண் 61/2014 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு பத்திரங்களும் பதிவாகும் சமயத்தில் நான் உடனில்லை என்பதாமல் அதனை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனவே அது குறித்து நான் அளிக்கும் விவரங்கள் செவி வழியாக எனக்கு கிடைக்கப்பட்டது என்றால் சரிதான்.

12. யார் கூறி எனக்கு தெரியும் என்றால் 12.08.2013–ல் வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகு தான் அது போன்று இரண்டு ஆவணங்கள் உள்ள விவரமே எனக்கு தெரியும். அந்த அறிவிப்பு வாதியான முனிக்குமார் அனுப்பியது. அந்த அறிவிப்பு அவர் கிரையம் வாங்கியதாக மட்டுமே குறிப்பிட்டு இருந்தார் என்றும் வேறு எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு ஆவணங்களும் முறையாக வாங்கப்பட்ட ஆவணங்கள் என்றும் யார் சொல்லி தெரியும் என்றால் பொதுவாகவே அந்த ஆவணங்கள் செல்லாது என்று கூறினார்கள் அதன் அடிப்பைடியில் எனக்கு தெரியும். என் மீது யார் செட்டில்மெண்ட் எழுதினார்கள் என்றால் என் மனைவி மட்டும் தான் எழுதினார். மொத்த சொத்துக்களும் ஒரே ஆவணத்தின் மூலமாக எழுதப்பட்டதா அல்லது தனித்தனி ஆவணமாக எழுதப்பட்டதா என்றால் ஒரே ஆவணத்தின் மூலமாக எழுதப்பட்டது. மேற்சொன்ன ஆவணம் எழுதுவதற்கு முன்பு வில்லங்க சான்றினை வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். 12.04.2013 ல் தான் மேற்சொன்ன

செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் போட்டுப்பார்த்த வில்லங்கத்தில் சொத்துக்கள் முனிக்குமார் என்பவரால் வாங்கப்பட்டது என்ற வவிரம் இடம் பெறவில்லையா என்றால் இடம் பெறவில்லை.

13. அவ்வாறு நான் செட்டில்மெண்டிற்கு முன்பு போட்டுப்பார்த்த வில்லங்க சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆர்.டி.ஒ விசாரணையின் போது அங்கு ஒப்படைத்துவிட்டேன். தற்போது தாவா சொத்துகளின் அனுபவம் வாதி முனிக்குமாரிடம் தான் உள்ளது என்றால் சரிதான். என்படி வழக்கு சொத்தின் ஸ்வாதீனம் வாதியான முனிக்குமாரிடம் எப்போது சென்றடைந்தது என்றால் முதலில் கேசவநாயுடு தான் பயிர் செய்து வந்தார். வாதியிடம் ஸ்வாதீனம் எப்போது சென்றது என்று எனக்கு தெரியாது. கேசவநாயுடுவிடம் எப்போது ஸ்வாதீனம் இருந்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவர் எந்த வகையில் அனுபவித்து வந்தார் என்றால் என் மாமியார் முருகம்மாளின் தந்தை கேசவநாயுடு என்பதால் அவரிடம் ஸ்வாதீனம் கொடுத்து குத்தகை வசூல் செய்து வந்தார். அவ்வாறு குத்தைக்கு கொடுக்கப்பட்டதற்கான எந்த ஒரு எழுத்துப்பூர்வமான ஆதாரமும் இல்லை என்றால் தந்தை என்ற காரணத்தினால் அவ்வாறு எந்த எழுத்துப்பூர்வமான ஆவணங்களும் ஏற்படுத்தவில்லை.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 01.19. p.m.**